விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆனி 29 | சனிக்கிழமை (13.07.2002) | தொலைபேசி 3378 | ஒலி 206

JMC

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்; சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்

பீ.ஜெ. பர்னாண்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

## வடக்குக் கிழக்கில்

# வெகுஜனப் போராட்டம் நடத்த அரசு ஒருபோதும் அனுமதியாது!

## பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றில் அறிவிப்பு

(நமது நிருபர்)

**வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வெகுஜன அமைப்புக்களில் மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களுக்கோ ஹர்த்தால் நடவடிக்கைக ளுக்கோ இனிமேல் எந்தவிதமான அனுமதியும் வழக்கப்படமாட்டாது என பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்துள்ளார்.**

கிழக்குப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன பாராளுமன்றத்தில் நேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையை வெளியிட்டு வைத்துப் பேசும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அந்த அறிக்கையில் அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கிழக்கில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் விடுதலைப்

(08ம் பக்கம் பார்க்க)

## குண்டு துளைக்காத கார் விவகாரம்

# அரசின் விசாரணைக்கு பொ.ஐ.முன்னணி தயார்!

## கட்சியின் பேச்சாளர் பகிரங்க அறிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் தருவிக்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்கள் தொடர்பாக அரசு எந்தவிதமான விசாரணைகளை மேற்கொண்டாலும் அவ்விசாரணைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.**

அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றியும், பாராளுமன்றத்திற்குச்

...வுக்கு (246கோடியே 90லட்சம் ரூபா) குண்டு துளைக்காத கார்களை ஜனாதிபதி இறக்குமதி செய்தார் என்றும்

...திஸநாயக்கா தெரிவித்திருந்த கருத்திற்கே பொதுஜன ஐக்கிய முன்னணி

(08ம் பக்கம் பார்க்க)



## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு!

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா

(08ம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு பயிற்சி வழங்க அமெ. படை கொழும்பு வருகை

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்புப் படைகளுடன் கூட்டாகப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு அமெரிக்கத் துருப்பினர் குழுவொன்று கொழும்பு வந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

களத்தில் நிற்கும் படை...

முதலுதவி வழங்குதல் மற்றும் வேவுத் தொழில் நுட்பம் ஆகியவற்றில் இலங்கைச் சிறப்புப் படையினருக்கு பயிற்சி வழங்குவதற்காக அமெரிக்காவின் பயிற்சியாளர்கள் வருடத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகள் இலங்கைக்கு வரஏற்பாடுகள்

அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றியும், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்காமலும் கேள்விப்பத்திரம் கோராமலும் 2469 மில்லியன் ரூபா

## நெஸ்பிறேயின் விலை குறைப்பு

(கொழும்பு)

நெஸ்பிறே பால்மாவின் விலை கிலோவிற்கு 15ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இந்த விலைகுறைப்பு உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாகவும் இதேபோல் 400,500கிராம் பக்கற் நெஸ்பிறே இதேவிகிதத்தில் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(08ம் பக்கம் பார்க்க)

குண்டு துளைக்காத கார்களை ஜனாதிபதி இறக்குமதி செய்தார் என்றும் இது விடயத்தில் பொது மக்களுக்கு அவர் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்றும் ஜனாதிபதியின் முன்னாள் நெருங்கிய சகாவும் தற்போதைய ஐ.தே.முன்னணி அரசின் சமுர்த்தி அமைச்சருமான எஸ்.பி

திறகே பொதுஜன ஐக்கிய முன்னணி

(08ம் பக்கம் பார்க்க)

களத்தில் நிற்கும் படைகளுக்கு

(08ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு அமைச்சர் இன்று யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏ.ஆர்.எம். அப்துல் காதர் இன்று மாலை முஸ்லிம் பகுதிக்குச் சென்று பார்வையிடுவதுடன் முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்து குறைகளைக் கேட்டறியவுள்ளார். (வ)

# ஈழத்தமிழர்களுக்காகச் சிறை வாசம் சென்றது மகிழ்ச்சி தருகிறது

## சிறையில் இருந்தவாறு வை.கோ பேட்டி



(மதுரை)

ஈழத்தமிழ் மக்களுக்காக சிறைச்சாலைக்குச் சென்றமையால் தாம் மகிழ்ச்சி அடைவதாக மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

மதுரைச் சிறைச்சாலையில் போடோ சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வைகோ நேற்று பத்திரிகையாளர்களுக்கு அங்கு பேட்டியளித்தார்.

அப்பேட்டியிலே அவர் இதனை முக மலர்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெயலலிதா அரசின் பாசிச அரசியல் போக்கிற்கு அடிபணியமாட்டேன்.

(08ம் பக்கம் பார்க்க)


ஹற்றன் நஷனல்

சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் திட்டம்

கடன் வழங்கும் நோக்கங்கள்

- சிறுதொழில் தொடங்குதல்
- பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல்
- விவசாயத்திற்காக – குறுங்கால, நடுத்தரகால கடன்கள்.
- கால்நடை வளர்ப்பு
- வேறு சுயதொழில்கள்

மேலதிக விபரங்களுக்கு
HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலைபேசி: 021-2787, 021-3463
தொலைநகல்: 021-3194


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியில் நான்கு அறை இரண்டு கோல் கொண்ட புதுவீடு விற்பனைக்குண்டு காலை 9மணிக்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும். துரை இல 14 கச்சேரிலேன் கச்சேரி பின்புறம் யாழ்ப்பாணம். (5678)

### வகுப்புக்கள்

ஆண்டு1இல் இருந்து மேற்படிப்புவரை சிறந்தஆசிரியர்கள் வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத்தில் கூடியகவனமும் அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் (5651)

# விமானப் படையில் புதிதாக 800 பேர் இணைக்கப்படுவர்

### எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா

(கொழும்பு)
விமானப்படைக்குப் புதிதாக 800 பேரை சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசர தேவையுள்ளதாக விமானப் படையின் புதிய தளபதியாக நியமனம் பெறவுள்ள எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

சகல தரத்திலுள்ள விமானப்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதனால் இவ் அவசர ஆள்திரட்டல் நடைபெறவுள்ளது.

இதேவேளை, விமானப் படையின் புதிய தளபதி விமானப்படையை மறு சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

தான் பதவிக்கு வந்ததும் இந்த நடவடிக்கைகளை உடனடியாக அமுல்படுத்தவுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## இன்று 100 பேருக்கு சமய தீட்சை

ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தினால் இன்று சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் தலைமையில் 100 சைவப் பிள்ளைகளுக்கு சமய தீட்ஷை வழங்கப்படவுள்ளது.

சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள் தீட்ஷையை வழங்கவுள்ளார். (உ)

# தேசிய விளையாட்டு விழாவில் வடகிழக்கைச்சேர்ந்த 7பேருக்கு பதக்கம் வழங்கி கௌரவம்

(யாழ்ப்பாணம்)
இந்தவருடம் செப்ரம்பர் மாதம் மாத்தறையில் இடம் பெறவுள்ள தேசியவிளையாட்டு விழாவில் வடக்குக் கிழக்கைச்சேர்ந்த 7பேர் விளையாட்டுத்துறையில் 25 வருடசேவை யாற்றியதற்ககா பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட வுள்ளனர்.

கே.டபிள்யு. நிமலராஜன் ஏ.எவ் நாவர், எஸ்.கனகராஜா, திருமதி ஏ.எவ்.ஜே ரூப சிங்கம், எஸ். அண்ணாத்துரை எஸ்.துரைசிங்கம், எம் முஷாதிக் ஆகியோரே பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

தேசியவிளையாட்டு விழாவில் இளைஞர் விவகாரம், விளையாட்டு அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெனாண்டோ நிகழ்வில் கலந்துகொண்டு அவர்களுக்கு பதக்கங்களை அணிவித்து கௌரவிக்கவுள்ளார்.

இதேவேளை வேறு மாகாணங்களைச் சேர்ந்தவிளையாட்டு துறைக்கு சேவையாற்றியவர்களும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ-6)

## இராசி பலன்

13- 07- 2002
(ஆனி 29, சனி)
திருதியை மு. ப 11. 32வரை
ஆயிலியம் மு. ப 7. 14வரை
மகம் வை. 5. 54வரை
ராகுகாலம்- 9. 59- 10. 29
நல்லநேரம்- 2. 59- 4. 29
சதுர்த்தி விரதம்

**மேடம்**
வியாபார நன்மை, குடும்பக் கவலை, காரிய தாமதம், உடல்நலக்குறைவு.

**இடபம்**
இனசனத் தொடர்பு, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி தாமதம், மனக்கிலேசம்.

**மிதுனம்**
காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, இனிய நிகழ்வு, சகோதரர் உதவி.

**கடகம்**
மாதர்நட்பு, தனவிரயம், அமைதிக் குறைவு, காரிய தாமதம்.

**சிங்கம்**
களஸ்திரநன்மை, பெரியோரால் மதிக்கப்படுதல், பிரயாணம், தொழில் சிறப்பு.

**கன்னி**
உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை, புதியதிருப்பம்.

**துலாம்**
நினைத்தகாரியம்கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, தனலாபம், தெய்வசிந்தை.

**விருச்சிகம்**
புதிய முதலீடு, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி, பிறர் உதவி.

**தனுசு**
பிரயாணம், உடல்நலக் குறைவு, குடும்ப நன்மை, முயற்சி தாமதம்.

**மகரம்**
கடன்தொல்லை, காரிய தாமதம், தொழில் நன்மை, உறவினர் மனஸ்தாபம்.

**கும்பம்**
சௌக்கியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், வியாபார நன்மை.

**மீனம்**
சுவாரஸ்யம், உடல்நலம், காரியநன்மை, பிரயாணபயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# மண்டபம் முகாமில் தங்க வைப்பு

(புதுடில்லி)
இலங்கை கடற்படையினரால் கட்டாயப்படுத்தி படகில் இருந்து இறக்கிவிடப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 6பேர் தமிழக மண்டபம் அகதிமுகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

படகு ஒன்றில் சென்றுகொண்டிருந்த இவர்கள் தனுஷ்கோடியிலுள்ள இரண்டாம் திட்டி என்ற இடத்தில் இலங்கைக் கடற்படையினரால் இறக்கிவிடப் பட்டதாகவும், இவர்கள் 6 பேரும் இந்திய கடற்படையினரால் மீட்கப்பட்டு மண்டபம் அகதி முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் முகாம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு படகிலிருந்து இறக்கி விடப்பட்ட 6 பேரும் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-6)

# மாபெரும் வர்த்தகக் கண்காட்சி யாழில் ஓகஸ்டில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
அடுத்தமாதம் 3,4,5ந்திகதிகளில் யாழ் மத்தியகல்லூரியில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

புனர்வாழ்வு அகதிகள்மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத்ஜயவர்த்தனாவின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக்கண்காட்சி வடக்கு தெற்கு வர்த்தகர்களிடையே நல்லிணக்க வர்த்தக உறவுகளை வளர்த்தல் மேம்படுத்தல் அபிவிருத்திசெய்தல் என்பவற்ரை நோக்கங்களாகக்கொண்டு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியின் மூலம் எதிர்காலத்தில் வடக்குதெற்கில் வியாபாரத் தொடர்புகளை வளர்த்துக்கொள்வதனூடாக நல்லதொரு எதிர்கால வர்த்தக சமூகத்தை உருவாக்க முடியும் என கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இவ்வர்த்தகக் கண்காட்சியில் வர்த்தகப்பொருட்களின் விற்பனையும் இடம்பெறவுள்ளது

மின்உபகரணங்கள், விவசாயஉபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள், துணிவகைகள் அலங்காரப்பொருட்கள், மட்பாண்டப்பொருட்கள், அலுவலக தளபாடங்கள் வெளிநாட்டுப் பாதணிகள், உணவு பதனீட்டுப் பொருட்கள் கணனி உதிரிப் பாகங்கள் கணணி வகைகள் என்பன இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். (ஷ-6,19)

# வற் வரிசட்ட மூலவிவாதம் இம்மாதம் 25 இல்

(கொழும்பு)
வற் எனப்படும் பெறுமதி கூட்டப் பட்டவரியை அறவிடுவது தொடர்பான உத்தேச சட்ட மூலம் மீதான விவாதம் எதிர் வரும் 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடத்தப் படவுள்ளதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று முன் தினம் பாராளுமன்ற கட்டத்தொகுதியில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இவ்வரி சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு கடந்த 10 ஆம் திகதி சபாநாயகரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதுடன், கடந்த புதன்கிழமைஇச்சட்ட மூலம் 33 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேறியதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் மனித உரிமை தொடர்பாக ஆராய விசேடபிரதிநிதி நியமனம்

(யாழ்ப்பாணம்)
யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அனுசரணையுடன் யாழ் குடாநாட்டில் இடம்பெயர்ந்துவாழும் மக்களின் மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்வதற்கென விசேட பிரதிநிதியொருவர்நியமிக்கப் பட்டுள்ளார்.

சட்டத்தரணி ஏ.எஸ்.எம். ரயிஸ் என்பவரே இவ்வாறு நியமனம் பெற்றுள்ளார்

இவ்வாறு சேகரிக்கப்படும் தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டு தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப் படவுள்ளது.

அகதிமுகாம்களில் நீண்டகாலமாக வசித்துவரும் அகதிகளின்நிலைமைகள் உறவினர் நண்பர்கள் ஆகியோர் வீடுகளில் வசித்துவரும் அகதிகளின்நிலைமைஇடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீளக்குடியமர்வில் ஏற்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக முதற்கட்டமாக ஆராயப்படவுள்ளது. (உ-19,6)

# வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர்கள் ஹாட்லி விஜயம்

(மந்திகை)
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வெளிநாட்டு பழைய மாணவர் சங்கக் கிளைப் பிரதி நிதிகள் குழு ஒன்று எதிர் வரும் 27,28ஆம திகதிகளில் கல்லூரிக்கு விஜயம் செய்யவுள்ளது.

கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வதியும் பழையமாணவர்களுடன் கொழும்புக்கிளை உறுப்பினர்களும் அங்கு வருகைதந்து கல்லூரியில் இரண்டு தினங்கள் நடைபெறவுள்ள மாநாட்டில் கல்லூரியை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் மற்றும் பல்வேறு வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். (ஷ-23)

## பொலிஸ் அதிகாரியை இளைஞர் தாக்கினார்

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸார் இருவரை இளைஞர் ஒருவர் தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக் கோட்டை மூளாய்வீதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் இன்னொரு பொலிஸ் காரரும் மோட்டார் சைக்கிளில் மூளாய்வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தவேளை அப்பகுதியிலுள்ள கள்ளுத் தவறணை ஒன்றின் முன்னால் நின்று கொண்டிருந்த இளைஞருடன் கதைக்க முற்பட்டுள்ளனர்.

அவ்வேளை அவர்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டபோது அந்த இளைஞன் பொலிஸ் அதிகாரியைத் தாக்கியுள்ளார்.

இதனை அடுத்து இளைஞனை மடக்கிப் பிடித்த பொலிஸார் அவரிடம் இருந்த அடையாள அட்டையைப் பறிமுதல் செய்ததுடன் பொலிஸ் நிலையத்தில் வந்து அதனைப் பெற்றுச்செல்லுமாறு கூறிச்சென்றதாகத் தெரியவருகிறது. (ஷ-216)

யாழ். நூலக புனரமைப்பு

# 50 மில்லியன் வழங்க ஜயலத் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)
யாழ். நூலகப் புனரமைப்புக்கென 50மில்லியன் ரூபா நிதியை வழங்குவதற்கு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன உறுதியளித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ். மாநகரமுதல்வர் எஸ். கந்தையன் அங்கு அமைச்சர் ஜயலத்தைச் சந்தித்து, யாழ். மாநகர சபையின் நிலை மற்றும் நூல் நிலையப் புனரமைப்பு ஆகியன தொடர்பாக கலந்துரையாடினார்.

அவ்வேளை மேற்கண்ட உறுதிமொழி வழங்கப் பட்டது. (உ-19)

## திருவாசக பாராயணம்

அகில இலங்கை திருமுறை மன்றம் இன்று காலை 7.00 மணிக்கு மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு திருவாசக பாராயணத்தை நல்லூர் காமாட்சி அம்பாள் மடாலயத்தில் நடாத்தவுள்ளது. (ஷ- 8)

# பத்திரிகைத் துறையில் துணிவுடன் செயலாற்றி தனி இடம் வகித்தவர் அமரர் கோவை மகேசன்

இன்று அமரர் கோவை மகேசனின்
10வது ஆண்டு சிராார்த்த தினம்

### கு. தியாகராச சர்மா

இலங்கைத் தமிழ் மக்களிடையே சுதந்திர தாகத்தையும் தமிழீழம் தமிழ் மக்களின் தாயகம் என்பதையும் ஓங்கி ஒலிக்கச் செய்வதில் சுதந்திரன்பத்திரிகை ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கதாகும் தந்தைசெல்வாவினால் நிறுவப்பட்டசுதந்திரன்பத்திரிகை தமிழ் மக்களின் தன்மான உணர்ச்சியைத் தூண்டுவதிலும்தமிழ் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்துவதிலும் ஆற்றிய மகத்தான பணியை யாரும்மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

சுதந்திரன்
பத்திரிகையாசிரியர்

குறுகிய இன,மத, மொழி, வகுப்புவாதங்கள் என்றெல்லாம் மாற்றுஎண்ணங்கொண்டோரால் பழிகள் சுமத்தப்பட்ட இக்கட்டான கால கட்டங்களில் மக்களுக்குத் தமிழினப்பற்றினை ஊட்டிவளர்த்திடப் பெரும்பாடு பட்டவர் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியராக உறுதியுடன் பணியாற்றிய வரானகோவை மகேசன் ஆவார்.

சுதந்திரன் பத்திரிகையில் வாரந்தோறும் வரும் அரசியல் மடல்விமர்சனங்களையும் ஆய்வுகளையும் வாசிப்பதற்காகவே வாசகர்களும். அரசியல் ஆர்வலர்களும் துடிதுடித்துக் கொண்டிருந்ததனை மறக்க முடியாது.

வெலிக்கடை
சிறையில்

கோவை மகேசனுடைய பேனாமுனையின் வலிமைக்கு முகங்கொடுக்க முடியாமற் திணறிய அரசியற் பத்திரிகைகளும், எழுத்தாளர்களும், மாற்றுக் கட்சியினரும் இழித்தும்,பழித்தும் வசை மாரி பொழிந்ததுண்டு.

ஆயினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலட்சியப் பற்றுடனும்- உறுதியுடனும் நெஞ்சுரத்துடனும் பத்திரிகைத் துறையில் அஞ்சாத ஜாம்பவானாக நிமிர்ந்து நின்றதற்குப் பரிசாக வெலிக்கடைச் சிறையில் தள்ளப்பட்டார். எதிர்பாராதவிதமாகச் சிறையில் இருந்து மீண்டு வந்து எதிரிகளின் வஞ்சக வலைகளில் அகப்படாது தமிழகம் சென்றார்.

வீரவேங்கை பத்திரிகையில்

தமிழகத்தில் இருக்கும் போதும் வீரவேங்கை பத்திரிகை ஆசிரியராகஇருந்துஈழத் தமிழரின் தமிழீழப் பேராட்டத்திற்கு வலுவூட்டினார்.

தமிழ்ப்பத்திரிகைத் துறையில் தமக்குத் தாமேநிகராகத் தனிப் பேராற்றலுடன் விளங்கிய கோவை மகேசன் 1992 யூலை மாதம் தமிழகத்திலேயே திடீரென ஏற்பட்ட நோய்காரணமாக இயற்கை எய்தினார்.

வெளியீடுகள்

கோவை மகேசன் அவர்களால் வெளியிடப்பட்ட மே 22, நெஞ்சம் நிறைந்ததம்பி, துரோகிகளே தூரவிலகுங்கள், அரசியல் மடல் தொகுதி, செல்வா நினைவஞ்சலி போன்ற வெளியீடுகளும் கட்டுரைகள், விமர்சனங்கள் பலவும் தமிழ்மக்கள்நெஞ்சங்களில் இன்றும் தன்மான உணர்வினை ஊட்டுவனவாக நின்று நிலைப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் மறக்கமுடியாத ஒருவராக வாழ்ந்து தமிழ்மக்கள்நெஞ்சங்களில் இடங்கொண்ட அமரரை இன்று நினைவு கூர்வோமாக.

## குளங்கள் புனரமைப்பு

(மந்திகை)

நியாப் திட்டத்தின்கீழ், புலோலி, அம்பன் கமநல சேவைத்திணைக்கள பகுதிகளில் இரு விவசாயகுளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

புலோலி கமநல சேவை திணைக்களப்பிரிவில் நெடுங் கிராய் விவசாய குளமும், அம்பன்பகுதியில் கவுடுவிராய் விவசாய குளமுமே புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-23)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினூடாக மின்சார சபையில் பயிற்சி பெற்ற அனைத்து பயிலுநர்களுக்குமான ஒன்றுகூட்டல் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு சுன்னாகம் சிவன் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது. (உ)

## வாகன சாரதிகள் செலூலர் தொ. பே பாவிக்கத் தடை

(கொழும்பு)

அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத்தடுக்கும் பொருட்டு,செலூலர்தொலைபேசியில் பேசிக்கொண்டு வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (உ)

# அரசியல்வாதிகளை அம்பலப்படுத்துவது மட்டுமே பத்திரிகையாளரின் பணியாக இருக்கக்கூடாது

### இலங்கைமன்றக் கல்லூரியில் பேராசிரியர்ஸ்ரீஸ்பாஸ்ரர்நிக்

(தென்மராட்சி)

''அரசியல் வாதிகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் அம்பலப்படுத்துவதை மட்டுமேநோக்காகக்கொண்டு பத்திரிகையாளர்கள் செயற்படக்கூடாது.

நியூ மெக்சிக்கோ அரச பல்கலைக் கழகத்தின் மக்கள் தொடர் பாடல் பீடத்தின் தலைவரான பேராசிரியர் ஸ்ரீஸ்பாஸ்ரர்நிக் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்புஇலங்கை மன்றக் கல்லூரியில் வடக்கு-கிழக்கு பத்திரிகையாளர்களுக்கு அமெரிக்க தூதரகத்தினால் நடத்தப்பட்ட மூன்று நாள் பயிற்சியிப்பட்டறை நிறைவு நாள் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமெரிக்க தூதுவராலயத்தின் செயலாளர் ஸ்ரீவ் சொல்கிட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் ஸ்ரீஸ்பாஸ்ரர்நிக் தொடர்ந்து உரையாற்றுகையில்;

பத்திரிகையாளர்கள் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் செயற்படவேண்டியவர்கள். அரசியல் வாதிகளின் செயற்பாடுகளை அம்பலப்படுத்துவதை மட்டும் நோக்காகக் கொண்டுபத்திரிகையாளர்கள் பணியாற்றக் கூடாது

சமுதாயத்தில் மக்களைப் பாதிக்கும் பல்வேறு விதமான விடயங்களை இட்டு பத்திரிகைகள் மௌனம் சாதிப்பது வருத்தத்திற்குரியது.

இலங்கையில் பத்திரிகைத் துறை இன்னும் வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலேயே உள்ளது. பத்திரிகையாளர்கள் யாவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே தமது உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்றார்.

இப்பட்டறையில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 20 பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். (ஷ-77)

## டெங்குபற்றி பாடசாலைகளுக்கு அறிவுறுத்து

(சுதுமலை)

டெங்கு காய்ச்சலையும் நுளம்புப் பெருக்கத்தையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி, மருதனார்மடம் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளுக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல்,பாடசாலைச் சுற்றாடலில் சுகாதாரம் பேணல்,சிரமதான நிகழ்வுகளை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை சுகாதார சேவைகள் திணைக்களத்துடனும் அவ்வப்பகுதி சுகாதார உத்தியோகத்தர்களுடனும் மேற்கொள்ளுமாறும்,

மாணவர்களுக்கு டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார். (ஷ-252)

## மண் ஏற்ற அனுமதிகோரி விண்ணப்பங்கள் குவிவு

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மண்ணினைப் பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, வருவதுடன்

தமது சொந்தப்பாவனைக்கென சுமார் 500 பேர் மண்ணுக்குவிண்ணப்பித்துள்ளனர்

இதேவேளை, மண் அனுமதி வழங்கும் பணியினை 15தினங்கள் ஒத்திவைக்குமாறு சூழல் பாதுகாப்பு குழுத் தலைவர் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார். (உ-23)

## பனம் பொருள் விற்பனை நிலையத்தை நாடும் தென்பகுதி மக்கள்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின்பனம் பொருள் விற்பனை நிலையத்தினை நாடிச்செல்லும் தென்பகுதி மக்களின் தொகை நாளுக்குநாள அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

பனைசார் கைப்பணிப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவே இவர்கள் அங்கு எப்பொழுதும் பெருமளவில் குழுமிநிற்கின்றனர். (உ-6)

## ஜனாதிபதி மீது எஸ். பி. குற்றம் சாட்டுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகக குமாரதுங்கவின் ஆடம்பர வாகனங்கள் கொள்வனவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக கமத் தொழில் கால்நடை வளர்ப்பு அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

சுமார் 246 கோடி ரூபா செலவில், பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இவ்வாகனங்கள் தொடர்பாக பாராளுமன்றத்திலோ அல்லது அமைச்சரவையிலோ அங்கீகாரம் பெறவில்லை என்பதுடன் முறையான கேள்விப் பத்திர வழிமுறைகளும் பின்பற்றப்படவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் வாகனக் கொள்வனவுக்கென வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 6 கோடி 30 இலட்சம் ரூபா நிதிமாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப் பெருந்தொகையான நிதியை ஜனாதிபதி எத்திட்டத்தின் கீழிருந்து பெற்றுக் கொண்டார் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இறப்பர் உற்பத்தி கூட்டுத்தாபனத்துக்கு 90 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்தமையிலும் ஊழல்கள் இடம் பெற்றிப்பது கணக்காய்வு மூலம் தெரியவந்திருப்பதாகவும், இந்நிதியில் 15 கோடி ரூபாவிற்கு எந்தவிதமான கணக்குகளும் காட்டப்படவில்லையெனவும் திஸநாயக்கா சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## வை.கோ. கைது செய்யப்பட்டிருப்பது உலகத் தமிழரின் ஒட்டுமொத்த அதிருப்தியை சம்பாதிக்கும் செயல்

### இ.தொ.ஐ.மு. தலைவர் சென்னன் கருத்து

(கொழும்பு)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர்வை. கோபாலசாமியை நேற்று முன்தினம்தமிழகஅரசு கைது செய்ததன் மூலம் உலகளாவிய ரீதியில் வாழும் தமிழர்களின் அதிருப்தியை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தமிழக அரசு தள்ளப்பட்டிருப்பதாக இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் ரி. வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

தமிழீழவிடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வை. கோபாலசாமி தமிழகத்தில் பேசினார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்குற்றச் சாட்டுக்காகதமிழக அரசாங்கம் இவரைகைது செய்வதில் நியாயம் எதுவும் இல்லை எனவே இவரை விடுதலை செய்வதற்கு இந்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சென்னன்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இன்று உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கருதப்பட்டு வருகிறார்.

அவருக்கு ஆதரவு தெரிவிப்பதில் எந்தவிதமான மாறுபாடான கருத்துக்கும் இடம் இல்லையெனவும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## யோகாசனப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சாந்திகம் உளவளத் துணை நிலையத்தில் இம் மாதம், 20 ஆம் திகதிமுதல் ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் மாணவர்கள உட்பட எல்லாத் தரப்பினருக்குமான யோகாசனப் பயிற்சிகாலை 6.00 மணி முதல் 7.00 மணிவரை இடம் பெறவுள்ளது.

கலந்துகொள்ளவிரும்பும் ஆண், பெண் இருபாலரையும் 20 ஆம் திகதி சனிக்கிழமை சமுகமளிக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (உ)

## அதிமேற்றிராணியார் தெரிவு

கொழும்புஅதிமேற்றிராணியாராக வணக்கத்துக்குரிய கலாநிதி ஒஸ்வால்ட் கோமிஸ் பாப்பரசரினால் நியமிக்கப் பட்டுள்ளார்.

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் சார்பில் இலங்கையில் பிரதிநிதித்துவம் செய்யும் வணக்கத்திற்குரிய கலாநிதி தோமஸ் இவ் நியமனத்தை அறிவித்துள்ளார். (உ-3)

# தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாக திருப்பியனுப்ப வேண்டாம்

## ஐரோ. நாடுகளிடம் கஜேந்திரகுமார் எம்.பி தனித்தனியே வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையினுள் உள்நாட்டில் ,இடம்பெயர்ந்தவர்களும் நாட்டைவிட்டுத் தப்பியோடியவர்களுமான இரு சாராரிலும் பெரும்பாலான அகதிகள, 'ஒன்றில் விமானக் குண்டுவீச்சினாலும், அரச படைகளால் ஏவப்பட்ட ஆட்டிலறி ஷெல்களினாலும் தமது வீடு, உடைமைகள் அழிக்கப்பட்டவர்கள், இன்றேல் அரசாங்க ஆயுதப் படைகளினால் 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் தமது காணி உடைமைகள் பறிக்கப்பட்டவர்கள். இற்றைவரை இக் குடும்பங்களுக்கு அரசாங்கம் நட்டஈடு எதுவும் கொடுக்கவில்லை; பொருளாதாரச் சீரழிவே அதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது.

அதன் விளைவாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக இலங்கைக்குள் இருப்பவர்கள் ஒன்றில் வேறு ஆட்களின் வீடுகளில் குந்தியிருக்கின்றனர். இன்றேல் மிக அவலமான நிலையில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இச் சூழ்நிலைகளில் ஏனைய நாடுகளிலிருந்து தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடு கடத்துவதானது, நிச்சயமாக மனிதாபிமான நெருக்கடியொன்றை ஏற்படுத்தும்.

தமிழ் அகதிகளை நாடு கடத்துவது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சில மேற்கொண்டு வரும் முயற்சிகளை முறியடிக்கும் விதத்தில் உண்மை நிலைமையை விளக்கி யாழ். மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அந்தந்த நாடுகளின் உள்நாட்டு அமைச்சர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க், சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து நாடுகளின் உள்நாட்டு அமைச்சர்களுக்கு அனுப்பிவைத்துள்ள அக் கடிதங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இன முரண்பாட்டுக்குப் பேச்சுவார்த்தைத் தீர்வொன்று எட்டப்படும்வரை மேற்படி நிலை தொடருமென நாம் எதிர்பார்க்கின்றோம். இதன் விளைவாகத் தமிழர் இப்போதும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் தான் தம்மைக் காண்கின்றனர். இன முரண்பாட்டுக்குத் தீர்வொன்று காணப்படும்வரை இந் நிலைமை தொடரும். எனவே, தமிழ் அகதிகளை இலங்கைக்கு வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்ப வேண்டாமெனத் தங்கள் அரசாங்கத்தை நான் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதானச் செயல்முறையின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் தமிழர்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் நிலவுகின்ற ஒட்டுமொத்த நிலைமை தொடர்பாகவும், பழிவாங்கப்படுவதன் காரணமாக இலங்கையை விட்டுத் தப்பியோடிய தமிழர்களை இலங்கைக்குத் திரும்பவும் நாடுகடத்தக் கூடிய சாத்தியத்துடன் அவற்றிற்கு நேரடித் தொடர்புள்ளதென நான் நம்புவதாலும் இதனை நான் உங்களுக்கு எழுதுகின்றேன்.

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குச் சாதகமான சூழலொன்றை உருவாக்ககூடியதாக, நாட்டில் சமாதானத்தையும் வழமை நிலையையும் ஏற்படுத்தும் எண்ணத்துடன் இவ்வாண்டு பெப்ரவரியில் யுத்தநிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனரென்பதை நீங்கள் அறிவீர்கள். அதன் விளைவாக, மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் அவ்வுடன்படிக்கையின் கீழ் சில கடப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். சமாதானச் செயல்முறை தொடர்பில் படிப்படியான அணுகுமுறையொன்று பின்பற்றப்படுமென சம்பந்தப்பட்ட எல்லாத்தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே, முறையான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு இன்றியமையாத ஒரு காரணி உடன்படிக்கை முழுமையாக அமுல் செய்யப்படுதலாகும். துரதிர்ஷ்டவசமாக உடன்படிக்கையின்படியான கடப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கியொழுகுவதற்கு அரசாங்க ஆயுதப் படைகள் கூடிய கால அவகாசம் கோருவதனால் சமாதானச் செயல்முறையின் வேகத்தில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் தான் வாகரையிலும் வேலணையிலும் மூதூரிலும் அண்மையில் சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றின் விளைவாகக் கிழக்கு மாவட்டங்களான திருகோணமலையையும் மட்டக்களப்பையும் கலவரங்கள் சூழ்ந்தன. தற்போதைய சமாதானச் செயல்முறை எந்தளவுக்கு ஐயப்பாடானதாகவும் எளிதில பற்றி எரியக் கூடியதாகவும் இருக்கின்றதென்பதை இச் சம்பவங்கள் தெளிவாக விளக்கிக் காட்டின.

சம்பந்தப்பட்ட தரப்புகளால் யுத்தநிறுத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல் தடவையல்ல. முன்னர் பேச்சுவார்த்தைகளுக்கான நான்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை தோல்வியைத் தழுவியதன் விளைவாக அவற்றைத் தொடர்ந்து படுமோசமான வன்செயல்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன. எனவே, தற்போதைய சமாதானச் செயல்முறை வெற்றிபெறும்மென ஊகித்தல் முதிர்ச்சியற்ற ஒரு முடிவாக இருக்கக்கூடுமென்பதுடன், நிச்சயமாக அது கடந்தகால அனுபவங்களுக்கு முரணானதுமாகும்.

மற்றுமொரு விடயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகாரிகளால் தேடப்படுபவர்கள் அவர்களிடம் சரணடைவார்களென்ற நம்பிக்கையில் அவ்வாறு தேடப்படுபவர்களின் உற்றார், உறவினர்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைது செய்து தனிமையில் அடைத்து வைத்துள்ள எண்ணற்ற சந்தர்ப்பங்கள் உள்ளன.

இலங்கைக்கு நாடு கடத்தப்படுபவர்களை விமான நிலையத்தில் வைத்துப் பொலிஸார் கைது செய்கின்றனர். நாடு கடத்தப்படுபவர் அனேக ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பி வந்தாலும்கூட வெளியில் காட்ட வேணும் அவர் விசாரிக்கப்படுகின்றார்.

நாடுகடத்தப்படுபவர் வேறொரு நாட்டில் அரசியல் தஞ்சம் கோரினாரென்ற ஒரு காரணமே போதும். அவர் இலங்கைக்கு இழிவேற்படுத்த முயற்சித்தாரென்ற பெயரில் அவரை அடைத்துவைத்துச் சித்திரவதை செய்வதற்கு.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 1998 இன் 42 ஆம் இலக்கக் குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்)சட்டத்தின் கீழ் இலங்கைக்கு நாடு கடத்தப்படுபவர்கள் வந்திறங்கும் போது கைது செய்யப்படுகின்ற ஆபத்தையும், குறைந்த பட்சம் ஓராண்டுக்கான கட்டாய கடூழியச் சிறைத்தண்டனையும், கூடியபட்சம் ஐந்தாண்டுகளுக்கான கடூழியச் சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் ரூபா முதல் 2 இலட்சம் வரையான குற்றப் பணமும் விதிக்கப்படுகின்ற ஆபத்தையும் கொண்டுள்ளனர்.

குற்றப்பணத்தைச் செலுத்தத்தவறுமிடத்து சிறைத்தண்டனை மேலும் கூட்டப்படும். (சட்டத்தின் 45 ஆம் பிரிவு). இச்சட்டத்தின் கீழ் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்குவதற்கான ஏற்பாடு தன்னும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## வி. கழக விபரங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும், அவற்றின் பூரண விபரங்களை இம்மாத இறுதிக்குள் யாழ். செயலக விளையாட்டுத் துறைப் பணிமனையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## நூலகத் திறப்பும் கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய நூலகத் திறப்பு விழாவும், கலை விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ந சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதனும் சிறப்பு விருந்தினராக ஒய்வுபெற்ற அதிபர் திருமதி இ. இராஜக்கோனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஷ)

## உணவகங்களில் திடீர் சோதனை

(சுதுமலை)

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள பேக்கறி மற்றும் உணவகங்கள் கடநத புதன் கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீரென பரிசேதனைக்குட்படுத்தப்பட்டன.

பண்டத்தரிப்பு, பெரியவிளான், இளவாலைப்பகுதி உணவகங்களில்நடத்தப்பட்ட இப் பரிசோதனையை மானிப்பாய், சுகாதார வைத்திய அதிகாரிபிரிவைச் சேர்ந்த நான்கு சுகாதாரப் பரிசோதகர்கள் கொண்ட குழுமேற் கொண்டது.

மேற்படி பரிசோதனையின் போது அங்கு நிலவும் பலவித குறைபாடுகள்சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவற்றைத்திருத்துவதற்கு கால அவகாசமும் வழங்கப்பட்டது.

(ஷ-252)

## கரும்புலிகள் பாகம் - 2 இசைத்தட்டு விற்பனை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தின் ''கரும்புலிகள் பாகம் -2 பாடல் இசைத்தட்டு நேற்று முன்தினம் முதல் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ஒலி பதிவுக் கூடங்களிலும் இவ் இசைத் தட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும் என கலை பண்பாட்டுக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி இசைத்தட்டு கரும்புலிகள் தினத்தன்று வெளியிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## கட்சி வளர்ச்சியடைய மக்கள்பணி அவசியம்

### விநாயகமூர்த்தி எம். பி. வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின்ஒவ்வொரு அரசியல் கட்சியும் மக்களுக்கு வேண்டிய சேவைகளை செய்தால் அக்கட்சி தாமாகவே வளர்ச்சியடையும் என அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கான விஜயமொன்றை மேற்கொண்ட இவர் அங்கு ரயில்நிலையவீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் தொண்டர்கள் மத்தியில் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

சமாதான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் இன்னமும் செய்யப்படவில்லை. மக்கள் குழப்பமடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் பலர் உள்ளனர். சமாதானமுயற்சிகளைக்குழப்பும் எத்தனிப்புக்கள் நேரடியாக இல்லாது விடினும்மறைமுகமாகநடைபெற்று வருகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இருதசாப்தங்களாக நடைபெற்று வந்த போர் மீண்டும் தொடர்வதனை விரும்பவில்லை.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானபேச்சுவார்த்தைகளின் போது, வடக்கு-கிழக்குமாகாணத்தின்இடைக்கால நிர்வாகசபையைதமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பது குறித்தே ஆராயப் படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இரு சமூகங்களினதும் நலன் கருதி தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் மு. கா. இணைந்து செயற்பட முடிவு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து தமது எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

நாட்டில் தற்போது அமுலில் இருந்துவரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக வாழவேஇந்நடவடிக்கை எடுக்கும் வகையிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் இடம்பெற்ற இரு தரப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது இரு சமூகங்கள இடையேயும் எதிர்காலத்தில் முறுகல் நிலை ஏற்படாமல் இருப்பதற்கு இருகட்சிகளும் ஒன்றிணைந்து ஈடுபடவேண்டும் எனவும் இது தொர்டர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உப தலைவரும், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தற்போது நடைமுறையில் கொண்டு வரப்படவுள்ள புதிய தேர்தல் முறை குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

சிறுபான்மை இனங்களுக்கும், சிறிய அரசியல் கட்சிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலும், கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை இழக்காத வகையிலும் அரசாங்கம் தேர்தல் முறையொன்றினை அமுல்படுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கையொன்றினையும் சமர்ப்பிக்கவுள்ளன.

தற்போது ஜேர்மனியில் நடைமுறைப்படுத்தப்படும் தொகுதிவாரி மற்றும் விகிதாசார தேர்தல் முறை போன்று அரசாங்கம் இலங்கையில் தேர்தல் முறையை அமுல்படுத்த வேண்டும் என கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## விபத்தில் மாணவி காயம்

(மந்திகை)

தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவி ஒருவர் எதிரே வேகமாக வந்த வானுடன் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்தபுதன்கிழமை மாலை உடுப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்ற இவ் விபத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வ. உஷாநந்தினி (வயது 13 ) என்பவரே காயமடைந்துள்ளார்.

(ஷ-23)

# இன்று ஒரு தகவல்

## "இளமைப்பலி" எழுப்பிய எண்ணம்

அண்ணா துவக்கிய தி.மு. கழகத்தில் கொள்கை வழுவா வீரர்கள் எத்தனையோ பேர் சேர்ந்தார்கள். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் அன்றொருநாள் அண்ணாவின் பேச்சைக் கேட்டதனால் அரசியலுக்கு இழுக்கப்பெற்ற நெடுஞ்செழியன், அன்பழகன் போன்றவர்களைப் போல் பல இளைஞர்களும், வயதில் மூத்தவர்களும் அண்ணாவின் பாதையிலே திரள் திரளாக வந்தார்கள். இளைஞர்களில் குறிப்பிடத் தக்கவர் கலைஞர் மு. கருணாநிதி.

கலைஞர் கருணாநிதியை முன்பொருசமயம் அண்ணா திருவாரூரில் கண்டார். ஆச்சரியமான சிறுவனாக அன்று கருணாநிதி அண்ணாவுக்குத் தோன்றினார். அண்ணாவின் 'திராவிடநாடு' இதழில் கலைஞர் கருணாநிதி பள்ளியில் படித்த காலத்திலேயே ஒரு கட்டுரை எழுதினார். அதன் தலைப்பு ''இளமைப் பலி'' என்பதாகும். மு. கருணாநிதியின் கட்டுரையை அண்ணா படித்த பொழுது இந்தக் கட்டுரையாளர் மிகப் பெரியவராக இருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டார். ஒரு சமயம் அண்ணா திருவாரூருக்குக் கூட்டத்தில் பேச வந்திருந்தார். ''இளமைப்பலி'' கட்டுரையாளர் மு. கருணாநிதியின் நினைவு வரவே அவரைப் பார்க்க விரும்பினார்.

அண்ணா அழைக்கிறார் என்றதும் கருணாநிதி இனிய எண்ணங்களினால் எழுச்சி கொண்டார். யாரைக் காண வேண்டும். கண்டு ஆசைதீரப் பேச வேண்டும் என்று பல நாட்களாக ஆர்வத் துடிப்போடு காத்துக் கிடந்தாரோ அவரே தன்னை அழைப்பதைக் கேட்டதும் பூரிப்படைந்தார். உடனே துள்ளிக் கிளம்பினார். அண்ணாவைக் கண்டதும் கருணாநிதிக்குகைகட்டி நிற்கத்தோன்றியதே தவிர, பேச வாய்வரவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கு.

கருணாநிதியை அழைத்து வா என்றால் யாரோ ஒரு சிறுவனைத் தன் முன்னால் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்களே? என்று அண்ணாவுக்கு வியப்பு. யார் இந்தச் சிறுவன் என்று பார்வையினால் கேட்டார் அண்ணா. அவரது வியப்பைப் புரிந்து கொண்டு 'இவர்தான் நீங்கள் பார்க்க விரும்பிய கருணாநிதி. அண்ணாவுக்கு ஏற்பட்டிருந்த வியப்பு மேலும் மிகுந்தது. இந்தச் சிறுவனா கருணாநிதி? இவனா அந்தக் கட்டுரையை அத்தனை சிறப்பாக எழுதினான்? என்ற ஆச்சரியமும் சேர்ந்து கொண்டது. இரண்டும் இச் சிறுவன் தான் என்பது உறுதியானதும் அண்ணா கருணாநிதியைக் கட்டித் தழுவிக் கொண்டார். அந்த வயதில் பள்ளி மாணவனாகிய கருணாநிதிக்கு ஏற்பட்டிருந்த எழுத்தாற்றலை அவர் பாராட்டினார்.

பாராட்டியது மட்டுமல்ல. மற்றொன்றும் சொன்னார் அண்ணா, இது பள்ளியில் படிக்கும் வயது உனக்கு. கட்டுரை எழுதுவதிலேயே கவனம் செலுத்தாமல் நன்றாகப் படி' ஒரு நல்ல அரசியல்வாதியின் உள்ளம், படிக்கும் மாணவனுக்கு இப்படித்தான் உபதேசம் செய்யும் அன்று அப்படித்தான் திருவாரூரில், முதல் சந்திப்பில் கருணாநிதிக்கு அண்ணா அறிவுறுத்தினார்.

பிறகு திருவாரூர் சிறுவன் இளஞ் சிங்கமாகி, அண்ணாவின் அருமைத்தம்பியாகி, கழக வரலாற்றில் முக்கிய இடம்பெற்றதை யாரும் மறந்திருக்க முடியாது. மு க. கழகத்தில் முக்கியமானவர் ஆனார். அண்ணாவின் அபிமானம், அன்பு, பாராட்டு அத்தனையும் பெற்றார். அண்ணாவின் பெரும்புகழ் பெற்ற பிரசார நாடகமான 'சந்திரோதயத்தில்' கலைஞர் மு. கருணாநிதி நடித்துள்ளார். அவருடைய இளமைத்துடிப்பையும், உரையாடல்களுக்கு முழுஉருவம் தந்துபேசும் ஆற்றலையும் கண்டஅண்ணா, நாடகத்தில் பொருத்தமான வேடம் தந்தார்.

அந்த நாடகத்தில் ஊருக்கு நல்லதுசெய்யும் துரைராஜ் பாத்திரத்தை அண்ணாஏற்று நடிப்பார். துரைராஜின் நல்லஒரு தோழராகக்கருணாநிதி நடிப்பார். அத்தோழமை தோளோடு தோள் கொடுத்துக் கழகப்பணிகள் பலவற்றுக்கு அன்றுமுதல் இன்றுவரை பயன்பட்டுத்தான் வருகிறது. 'சந்திரோதயம்' நாடகத்தில் ஒருதடவை துரைராஜ் பாத்திரமேற்று மிக உருக்கமாக அண்ணா நடித்துக்கொண்டிருந்தார். நச்சுக் கோப்பையைக் கையில்ஏந்தி உரையாடல் பேசிமுடித்தார். அதிலுள்ள ''நஞ்சை'' அண்ணா, பருகப் போன போது நாடகம் காணவந்த ஒரு தோழருக்கு அக்காட்சி நெஞ்சத்தை உலுக்கி விட்டது. சண்முகம என்ற அந்தத் திருவொற்றியூர்த்தோழர் திடீரென்று தன் இடத்திலிருந்து துள்ளிஎழுந்தார். 'அண்ணா! அண்ணா நஞ்சை அருந்தவேண்டாம்' என்று பெருங்குரலில் கூவிக் கொண்டே மேடையை நோக்கி ஓடினார். அது நாடகக்காட்சி, நடிப்புக்காக அண்ணா நஞ்சு பருகுவது போல் நடிக்கிறார் என்பதெல்லாம் அவருக்கு மறந்து போய்விட்டது.

இப்படி மக்களின் மனம் தொடும்படி அண்ணாவின் பிரசார நாடகங்கள் அமைந்திருந்தன. அண்ணாவும் கலைஞரும் மற்றும் கழக முன்னணித் தலைவர்களும் அதுபோன்ற நாடகங்களில் வேடமேற்று எத்தனையோ உள்ளக்கிளர்ச்சிகளை உண்டாக்கினார்கள். - நவீனன்

# வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தமிழ்த்தின போட்டிகள் யாழில்

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண தமிழ் மொழி தினப் போட்டிகளும் இறுதி நாள் விழாவும் இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை ஏற்படுத்தப் பட்ட பின்னர் மாணவர்களுக்காக மாகாண மட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் முதலாவது நிகழ்ச்சி இதுவாகும். (உ-3)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர நூதனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. (உ)

## இன்று பகல் மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின் நிலையத்தில் திருத்த வேலைகள் நடைபெற இருப்பதால் இன்று யாழ்.குடாநாடு முழுவதும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று சுன்னாகம் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## உடன் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை உடன் வந்து சந்திக்குமாறு யாழ். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுகேட்டுள்ளது.

சுவர்ணா ராஜேந்திரம், சுமதி ராஜேந்திரம், நல்லையா செல்லையா பத்தைமேனி, அச்சுவேலி.

நல்லையா குலேந்திரன், குலேந்திரன் இன்பம்பரிமளம், குலேந்திரன் பிரதீபன்கொழும்புத்துறை.

செல்வராசா ராணி, சபாரட்ணம் ராசம்மா சுழிபுரம்.

டாக்டர் சுப்பிரமணியம் பொன்னம்பலம்- பொன் மஹால், சந்நிதி வீதி அச்சுவேலி. (உ)

## நடமாடும் பேருந்து குறிகாட்டி

(மந்திகை)

பேருந்துதரிப்பு நிலையகுறிகாட்டியைக் கழற்றி தமக்கு விரும்பிய இடங்களில் நாட்டும் நடவடிக்கையில் ஆவரங்கால் 10ஆம் கட்டைப் பகுதியில்பொறுப்பற்றவர்கள்சிலர் அடிக்கடி ஈடுபட்டு வருகின்றனராம்.

இதனால் பேருந்துச் சாரதிகளுடன் பொதுமக்கள்வீணே முரண்படும் நிலை ஏற்பட்டு வருவதுடன், பேருந்துச்சாரதிகளும் சிரமப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இது விடயம் குறித்து வலிகிழக்கு பிரதேச சபையிடம் முறையிடப்பட்டுள்ளது. (உ-23)

## ஒளிப்பட வழங்குநர் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறைக் கோட்ட ஒளிப்பட வழங்குநர் சங்கம் நேற்றுமுன் தினம் நெல்லியடியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் திரைப்பட வெளியீட்டுபிரிவுப் பொறுப்பாளர் த. செழியன் மற்றும் வடமராட்சி அரசியல் துறை கோட்டப் பொறுப்பாளர் தயா ஆகியோர் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டனர். (த)

## யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு உதவ ரூ. 15லட்சம் ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் அகதிமுகாம்களில் இருக்கும் முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சுயதொழிலில் ஈடுபடவும் வன்னிப் புனர்வாழ்வுஅமைச்சர் சுமார் 15இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக இருக்கும் முஸ்லிம்கள் யாழ்ப்பாணம் வந்து மீளக் குடியேறும்பட்சத்தில் அவர்களுக்கும் இத்தகைய உதவிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## தேசிய பயிற்சிப் பாசறை வேம்படி முதலிடம்

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து நடாத்திய மாணவிகளுக்கான 9 வது தேசியப் பயிற்சிப் பாசறையின் பாடசாலைகளிற்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளின் அடிப்படையில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை 83 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் மூன்றாம் இடத்தை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியும். நான்காம் இடத்தை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் ஐந்தாம்இடத்தை யாழ். கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையும் பெற்றுள்ளன.

இரு தினங்கள் யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற்ற இப் பாசறையில் 20 க்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து சுமார் 300 மாணவிகள் கலந்துகொண்டார்கள். (உ-252)

## ஆடம்பர கார் விவகாரம் ஜனாதிபதி பிரதமரிடையே கருத்துவேறுபாடு அதிகரிப்பு

(கொழும்பு)

அரசுக்கும், ஜனாதிபதி குமாரதுங்காவுக்கு மிடையில் ஆடம்பர வாகனங்கள் இறக்குமதி செய்த விடயம் தொடர்பாக இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் ஜனாதிபதி பிரதமரை வாகனங்களை பார்வையிடுவதற்கு நேற்று முன்தினம் அழைத்ததன் மூலம் தீவிரமடைந்துள்ளது.

வாகனங்களை பார்வையிடுவதை விடவும் பிரதமருக்கு முக்கியமான பணிகள் உள்ளன என்று அமைச்சரவை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளது.

காணாமற்போனதாக கூறப்பட்ட வாகனங்களை வந்து பார்வையிடும்படி பிரதமரையும், பாதுகாப்பு அமைச்சரையும், வேறும் அதிகாரிகளையும் ஜனாதிபதி அழைத்திருந்தார்.

இதற்குப் பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தாராயினும், ஏனைய அமைச்சர்கள் இதனை நிராகரித்தனர். வாகனங்களை பார்வையிடுவதை விடவும் பிரதமர் செய்வதற்கு முக்கியமான பணிகள் நிறைய இருப்பதாக தெரிவித்தனர். (உ)

## கட்டைவேலி-நெல்லியடி ப,நோ.கூ.ச கூட்டுறவு தின நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

80ஆவதுஅனைத்துலகக்கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் அனுஷ்டித்து வரும் கூட்டு வார முதலாம் நாள் நிகழ்வு இன்றுமுற்பகல் 9.00மணிக்கு சங்கத் தலைவர்த சிதம்பரப்பிள்ளை தலைமையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வில் கலாநிதி க குணராசா (செங்கை ஆழியான்)புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

தமிழீழ அரசியல்துறையின் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரையாற்றுவார்.

தொடர்ந்து'விவேகானந்தரும்புலமையும்' எனும் தலைப்பில் டாக்டர் செ.சிவஞானசுந்தரம்(நந்தி)'படைப்பும் பிரதிபலிப்பும்' எனும் தலைப்பில் குப்பிளான் ஐ.சண்முகம், 'சமூக மேம்பாட்டில்நூல்களின்பங்களிப்பு எனும் தலைப்பில் செ.யோகநாதன் ஆகியோர்கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

புலமைப் பரிசில் வழங்கல், கவியரங்கம் ஆகிய நிகழ்வுகளும் இன்று இடம் பெறவுள்ளன. (ஷ)

## மிளகாய்செடியில் குருமன் நோய்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு அம்பன்பகுதி மிளகாய்த்தோட்டங்களில் குருமன் நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

நிலவும் அதிகவெப்பமே மேற்படி நோய்த்தாக்கத்திற்குக் காரணம்என விவசாயப் போதனாசிரியர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

## காலி மாவட்ட எம். பிக்கு 25 வரை விளக்க மறியல்

(கொழும்பு)

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பியசேன கனசேயியை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு எல்பிட்டிய மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்றுமுன் தினம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஈட்டிக்கல பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (த)

# அல்விஸ் ரவுண் கொலையோடு சம்பந்தமில்லாதவர்

# சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டபின் விடுதலையானார்

வத்தளை அல்விஸ்ரவுணில் 3 பேர்கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேக நபராக கப்பிடிக்கப்பட்ட ஜெரால்ட் என்னும் 39 வயதான நபரை விடுவித்த வத்தளைப் பொலிஸார், தாம் தவாறக அவரை கைது செய்துவிட்டதாகதெரிவித்துள்ளனர். ஆனால் காலம் கடந்து விட்டது. ஏனெனில் கொலைச் சந்தேக நபரைச் சரியாக அடையாளங்காணாத காரணத்திற்காக இவர்ஏற்கனவே பயங்கர விலையை கொடுக்கவேண்டி ஏற்பட்டு விட்டது.

வத்தளைப் பொலிஸாரால் இவர் இரக்கமற்ற முறையில் தாக்கப்பட்டுள்ளார். இரு பிள்ளைகளின் தந்தையான இவர் இன்று கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் உயிருக்குப் போராடிய நிலையிலுள்ளார். அவரது மனைவியும் உறவினர்களும் அவசர சிகிச்சைப்பிரிவு வாசலில் விழித்துக் காத்திருக்கின்றனர்.

ஜெரால்ட் கடத்தப்பட்டமை

கடந்த ஜூன் 3 ஆம் திகதி தொடக்கம் இது நடைபெறுகிறது. அன்று காலை 11 மணிக்கு கம்பஹாவிலுள்ள இவர்களது வீட்டிற்கு வந்த பொலிஸார் மூவர், வீட்டிலிருந்த ஜெரால்ட்டின் மனைவி பத்மா மற்றும் 3 வயது மகனையும் ஜீப் வாகனத்தில் ஏற்றிச் சென்று பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் ஓரிடத்தில் இருக்க வைத்தனர். இதே வேளை, வேலை முடிந்து வீடு திரும்பிய ஜெரால்ட் வீட்டிலிருந்த சிலரால் திடீரெனத் தாக்கிக் கடத்தியும் செல்லப்பட்டிருந்தார். அதன் பின்னரே மனைவியும்மகனும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஜெரால்டுக்கு என்ன நடந்தது என்பது பற்றிபோ, ஏன் கைது செய்யப்பட்டார் என்பது பற்றியோ அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவரின் மைத்துனர் தெரிவித்ததன்படி, பொலிஸார் ஜெரால்ட்டின் மனைவி, மற்றும் மகன்மீது தகாத வார்த்தைகளால் ஏசியுள்ளனர். அத்துடன் மகன் பார்வை ஆற்றல் குறைந்தவர். வலிப்பு நோயால் அவதிப்படுபவர்.

வத்தளைப் பொலிஸ் நிலையத்தில்

அடுத்துஜெரால்ட்டிடமிருந்து கொம்பனி வீதி பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டது, பின் அவரை வத்தளை பொலிஸ் நிலையம் கூட்டிச் சென்று கைகளைப் பின்புறமாக கட்டியும் தலைகீழாக தொங்கவிட்டும் கடுமையான முறையில் அடிக்கப்பட்டதுடன் அல்விஸ்ரவுணில் முதல் நாள் நடைபெற்றகொலையில் சம்பந்தப்பட்ட ஏனையோரைப் பற்றியும் கூறுமாறு மிரட்டப்பட்டார்.

> சித்திரவதைகளுக் கெதிரான ஐ.நா.வின் சாசனத்தில் ஒப்பமிட்டு ஏற்றுக் கொண்ட நாடுகளில் ஒன்று இலங்கை. இதன்படி எந்தவொரு நெருக்கடி நிலையிலும் கூட சித்திரவதை அனுமதிக்கப்படமாட்டாது.
>
> ஆயினும், இத்தகையகுற்றங்களைபுரிவோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கென ஒரு சட்ட ஏற்பாடு இதுவரை இல்லை எனச்சட்டத்துறை நிபுணர்கள் ஆதங்கம் வெளியிடுகின்றனர், இதுவரை 10 ற்கும் குறைவான பொலிஸாரே இத்தகைய குற்றங்களுக்காகத் தண்டனைபெற்றுள்ளனர்.
>
> பொலிஸாரின் பாதுகாப்பிலுள்ளவர்கள் மோசமான சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதும், பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதும் இலங்கையில் மலிந்து விட்டன என்று சர்வதேச மன்னிப்புச்சபையும், ஹொங்கொங்கிலிருந்துசெயற்படும்ஆசியமனிதவுரிமை ஆணைக்குழுவும் வேதனை தெரிவிக்கின்றன.

சம்பவதினமான ஜூன் 2ல் மூவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. இதேவேளை, மனைவியும் ஜெரால்டின் நண்பர்களும் வத்தளை பொலிஸ் நிலையத்தில் அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதை அறிந்து கொண்டனர்.

வத்தளை பொலிஸ் நிலையம் சென்று திரும்பிய ஜெரால்ட்டின் சகோதரரான ரஞ்சித் என்பவர் இது பற்றித் தெரிவிக்கும் போது, இருபொலிஸாரால் பொறுப்பதிகாரியின் அறைநோக்கி ஜெரால்ட் கூட்டிச் செல்லப்பட்டதாகவும் அப்போது அவரின் முகம் வீங்கி கருமை நிறமடைந்திருந்ததாகவும்தான், தொங்கவிட்டு அடிக்கப்பட்டதாக தன்னிடம் அவர் கூறியதாகவும் கூறினார். மேலும் ரஞ்சித் அடுத்த நாள் வத்தளை பிரதேச சபைதலைவர், மற்றும் பிரதித்தலைவருடன் பொலிஸ் நிலையம் சென்ற போது, இவர்களின்தலையீட்டின் பின் பொலிஸார் தாம் தவறான தகவலை வைத்து தவறான ஆளைப்பிடித்து விட்டதாகக் கூறி அவரை விடுதலை செய்தனர்.

தனியார் வைத்தியசாலையில்

ஜெரால்ட்டிற்கு வெளிக்காயங்கள் நிறைய இல்லாத போதும் மறுநாட்காலை அவர் கடுமையான உடல்வலியால் அவதிப்பட்டதைத் தொடர்ந்து தனியார் வைத்தியசாலையின் ஜூன் 15ல் அனுமதிக்கப்பட்ட அவரின் நிலை வரவர மோசமடைந்தது. அவரின் நுரையீரல், சிறுநீரகம், உட்பட உள் அங்கங்கள் கடுமையாக பாதிப்படைந்திருப்பதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அவர் அரசமருத்துவமனைக்கு இனி எடுத்துச் செல்ல முடியாத நிலை வந்துவிட்டது. 4 வாரவைத்தியசாலைக் கட்டணம் 1 மில்லியனாக உயர்வடைந்துள்ளது. தமதுகாணியையும் ஏனைய உடைமைகளையும் விற்றே அப்பணத்தை கட்ட விருப்பதாகவும், ஆனால் வைத்தியர்களின் கூற்றுப்படி அவர் மீண்டும் பழைய நிலைக்கு ஆவது கடினம் என்றும் கைகளை இனிமேல் பாவிக்க முடியாத

**தமிழில்: யூகி**

நிலை ஏற்படக்கூடும் எனவும் சகோதரர் ரஞ்சித் தெரிவித்தார்.

மனித உரிமைகள்மீறல்வழக்கு

பொலிஸாருக்கெதிராக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டமைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது பொலிஸ் மேலதிகாரி தெரிவிக்கையில்; இவ்வழக்கு மேலதிக விசாரணைக்காக சீ.ஐ.டி. யினரிடம் கையளிக்கப்பட்டுவிட்டது என்றும் பெருமளவு பொலிஸார் இதில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்றும் இவர்கள் விசாரணைகளின் போது பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## வாழைச்சேனை வன்செயல் இழப்பீடு விரைவில்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் வாழைச்சேனையில் அண்மையில் இடம் பெற்றவன் செயல்கள சம்பந்தமாக இழப்பீடுகள் வழங்கபபடவுள்ளன.

இவ் இழப்பீடுகளை வழங்குவதற்கு ஏதுவாக வாழைச் சேனையில் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை பெற்றுக் கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசாங்க அதிபர் இக்குழுவுக்கு தலைமை தாங்கவுள்ளார்.

வாழைச்சேனையில் சேதமடைந்தசொத்துக்களின்பெறுமதிகளில் 80 சதவீதம் நஷ்டஈடாக வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரையின் அடிப்படையில் வழங்கப்படவுள்ள நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள யாவும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்று 6 மாதங்களுக்குள் வழங்கப் படவுள்ளன.

இச் சம்பவத்தில் 170 க்கும் அதிகமான வீடுகளும், கடைகளும், கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. இவற்றின் பெறுமதி 55 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளன.

இங்கு இடம் பெற்றவன் செயல்களில் 7 பேர் இறந்துள்ளதுடன் 6 பேர் காணாமல் போயிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## கல்வித் திணைக்களகட்டடம் ஜமுனா ஏரிக்குள் இடிந்து விழும் அபாயம்

### தடுத்து நிறுத்த தகுந்த நடவடிக்கை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனையின் ஒரு பகுதி அருகேயுள்ள ஜமுனா ஏரிக்குள் இடிந்து விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது,

இது குறித்து யாழ்.மாநகர சபைக்கு பல தடவைகள் அறிவித்தும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

கடந்த 1991ஆம் ஆண்டு இடம்பெற்ற எறிகணைவீச்சினால் ஜமுனா ஏரியில் ஏற்பட்ட வெடிப்பு நீர் அரிப்பினால் காலப்போக்கில் பெரும் துவாரமாகியுள்ளது.

இதனால் மேற்படிஏரிக்கும் வலயக்கல்விப்பணிமனையின் ஒரு சுவருக்கும்இடையேமிகக் குறுகிய அளவுஇடைவெளியே தற்போது காணப்படுகிறது.

அத்துடன் இரண்டையும் பிரித்து இடையில் அமைக்கப்பட்ட மதிலும் சென்ற மாரி மழையின் போது இடிந்தது. இதனால் மண் அரிப்பு துரிதப்படுத்நப்பட்டு எதிர்வரும் மாரி மழையின் போது கட்டடம் இடிந்து விழும் அபாயம் எதிர்நோக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## சந்தேகநபர்களுக்கு எதிராக 72 குற்றச் சாட்டுகள்

(கொழும்பு)

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல்தினத்தன்று கண்டி உடத்தல்வின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான சந்தேக நபர்களுக்கு எதிர்க 72 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளன.

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை உட்பட 12 நபர்களுக்கு எதிராக கண்டி மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப் படவுள்ளன.

முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகளுக்கு சதி செய்தது, அதற்கு உறுதுணையாக இருந்தது, படு கொலைகளை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களும் இதனுள் அடங்கும்.

சட்டமா அதிபர் கமலசபேசன், ஜூரிமார் இல்லாமல் மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் இவ்வழக்கை விசாரணை செய்ய வேண்டுமென முடிவுசெய்திருப்பதாக தெரிய வந்துள்ளது. (உ-8)

## மண் விநியோக தினங்கள் வரையறை

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் விநியோக தினங்கள்வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் வாரத்தில் 3 தினங்கள் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கும், இருதினங்கள் யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேச மக்களுக்கும் விநியோகிக்கப்படும் என அப்பகுதி சூழல் பாதுகாப்புக்குழு அறிவித்துள்ளது.

மண்ணினைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் அலுவலகத்தில் இலக்கத்தைப் பார்வையிட்டு குறித்த நிலையத்தில் மண்ணைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## தென்பகுதி வர்த்தகர்கள் நேற்று யாழ் வந்தனர்

### யாழ் வணிகர்களையும் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து யாழ்.வந்த 19 பேரடங்கிய நான்காவது வர்த்தகர் குழு நேற்றைய தினம் யாழ்.வணிகர் கழகத்தில் யாழ்.வர்த்தகர்களுடன் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியது.

தென்பகுதி வர்த்தகர்கள்தங்கள் உற்பத்திப்பொருட்களை யாழ்.வணிகர்களுக்கு அறிமுகப்படுத்தி அவற்றின் பயன்பாடுபற்றியும் அவற்றின்பெறுமதி பற்றியும் விளக்கமளித்தனர்.

தத்தம்உற்பத்திகளையாழ்.குடா நாட்டிலும் விஸ்தரிப்பதோடு யாழ்.வர்த்தகர்களுடன் நல்லுறவைத் பேணி மேலும் தங்கள் வர்த்தகத்தை விருத்திசெய்வதேஇக்குழுவினரின் யாழ்.விஜயத்தின்நோக்கமாகும். (உ-2)

## பொது அறிவு போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கான கணித, விஞ்ஞான பொது அறிவுப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கலலூரியில் நடைபெறவுள்ளது. (உ-19)

## யாழ்.நூலகத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் நூல்கள் அன்பளிப்பு

தமிழ் நாட்டு மக்கள், புனரமைக்சப்படும் யாழ்.பொது நூலகத்திற்கெனஒருதொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மேற்படி நூல்கள் இந்தியத் தூதரசமூடாக யாழ்.மாநகர சபையிடம் இம் மாத இறுதிக்குள் கையளிக்கப்படவுள்ளன. (உ-19-6)

உடைத்தும் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்
குறள்

# வலம்புரி

## வைகோவின் கைது!

தமிழகத்தின் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி நேற்று முன்தினம் சென்னையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டுவருகிறார் என்ற குற்றச் சாட்டின் பேரில் போடோ சட்டத்தின்கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது இனத்தை இன்னோர் இனம் நசுக்குகின்ற போது அதற்குஎதிராகக் குரல் கொடுப்பது குற்றம் என்ற 'இன விரோத சட்டத்தை' உலகில் தமிழினத்தில் மட்டுமே காணமுடியும்.

தனக்கென்றொரு நாடு தனக்கென்றொரு உரிமை தன்னாட்சி, இவற்றைப் பெறுவதற்குக் கூட தமிழினத்தில் தடையென்றால் அந்த இனம் எங்ஙனம் உலகில் உயர்வு பெற முடியும்.

தமிழகத்தின் முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் அரசியல் வாழ்க்கையில்கலைஞர்முகருணா நிதியையும், வை. கோபாலசாமியையும் சிறைக்குள் அடைப்பதென்பது அவரின் சபதமாக இருந்தது. அதில் கலைஞர் கருணாநிதியை கொற இ மு வையில் கொண்டுபோய் சிறைக்குள் தள்ளித் தனது சபத நாடகத்தை அரங்கேற்றி முடித்தார். எனினும் கலைஞரின் கைதை விடுதலைப் புலிகளோடு இணைப்பதற்கு ஜெயலலிதாவால் முடியவில்லை அதற்குக் கலைஞரின் சந்தர்ப்பவாதப் புத்தியும் காரணம்.

ஆனால் வை. கோவை பொறுத்தவரை அன்றிலிருந்து இன்றுவரை ஈழத் தமிழர்களின் விடயத்தில் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் அவர் தனது கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். இதில் குற்றம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் முதல்வர்ஜெயலலிதாவைப் பொறுத்தவரை வை. கோவை எப்படியாவது சிறைக்குள் தள்ளிவிட வேண்டும் அதற்கு சாட்டாகவே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வை. கோ கருத்துத்தெரிவித்து வருகிறார் என்ற பெயரில் தனது சபதத்தை நிறைவேற்றியுள்ளார்.

எனினும் இந்நடவடிக்கைகள் தமிழினத்தின்கீழ்மைக்கும், அடிமைக்குமே வழிவகுக்கும்.

### இன்று மாணிக்கவாசகர் குருபூசை தினம்

# உள்ளத்தை உருகவைக்கும் திருவாசகத் தேனை

# உவந்தளித்த மணிவாசகர் புகழ் பாடுவோம்

முது பெரும்புலவர்

**வை.க. சிற்றம்பலம்**

சித்திரபானு வருடம் ஆனி மாதம் 29 ஆம் (13-7-2002) திகதி சனிக்கிழமை மகம் நட்சத்திரத்தில் மணிவாசகர் குருபூசை இடம் பெறுகிறது. சைவப்பெரு மக்களாகியயாம் மாணிக்க வாசக சுவாமிகளை நேரிற் காணவில்லை. ஆனால் அவரது திருவுருவத்தைக் காண்கிறோம். அவரது மெய்ஞ்ஞானமாகிய சிவஞானத்தை அவர் பாடிய திருவாசகத்தாலும், திருக்கோவையாராலும் உணர்ந்தறிகிறோம். ஆரம்பத்திலிருந்தே மெய்ஞ்ஞான உணர்வில்நாட்டங் கொண்ட சுவாமிகள் எத்தனையோ சோதனைகளுள் ஆளாகி மீண்டார் என்பது வரலாறு. சிதம்பரத்திலே புத்தரைவாதில் வென்ற காலத்தில், அவர் தங்கியமடத்துக்கு எமது பெருமானாகிய சிவபெருமான் ஒரு அந்தணப் பெரியாரின் வேடம் பூண்டு சென்றார். அவரைக் கண்டு உபசரித்த மணிவாசகனார் 'அடிகள் இங்கே எழுந்தருளியதுஎதற்கோஎனவினாவினார் அதைக் கேட்ட அந்தணப்பெரியார் உமது பெருமைகளையெல்லாம் உலகத்தார் கூற யாம் அறிவோம். நீர் அந்த இறைவன் மேற்பாடிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எழுதுவதற்காகவே வந்துள்ளோம். ஆகவேசொல்ல வேண்டும். என்று கேட்டுக் கொண்டார். மணி வாசகரும் அதற்கிசைந்து கூற, அவர் எழுதிமுடித்தார். அந்நிலையில், சிவபிரானாகிய அம்மறையவர் மறைந்து விட்டார்.

அம்பலக் கூத்தன் எழுதியமை

வந்தவர் தம்மை யாண்டருளிய இறைவனேயென்பதறிந்த மணிவாசகர் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பஞ் சொரிய மெய்ம் மறந்து வழிபடலானார்.

வேறு எந்தவொரு நூலுக்குமில்லாத சிறப்பு திருவாசகத்துக்கு உண்டு. ஏன்? அவ்வாசகம் அடியார்க் கெளியானாகிய அம்பலக் கூத்தனால் எழுதப்பட்ட அந்த ஒன்றேயாகும். நைந்து நைந்து உருகியபடி பாடச் செய்யும் அருள் திறம் வாய்ந்தது அது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வைப்பது. ஞானச் சுடரை எழுப்பி மெய்ஞ்ஞான வீட்டைத் தரவல்லது.

ஐம்பத்தொன்று

திருவாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களைக் கொண்டது. அஃதனைந்தும் ஐம்பத்தொரு மந்திரங்களுக்குச் சமமானவை, முருகபிரான் மீது பாடப் பெற்ற கந்தரனுபூதியும் ஐம்பத்தொன்றாகப் பாடப் பெற்றதை அன்பர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். முதலாகப் பாடப் பெற்ற சிவபுராணம் திருப்பெருந்துறையில் அருளப்பட்டது. ஐம்பத்தோராவது கடைசிப்பதிகமான அச்சோப்பதிகம் தில்லையம்பலத்தில் பாடியருளியது.

திருவாசகத்தைப் பாடுவோர் மெய்யன்போடு பாடினால் அது முத்திப் பாதையைத் திறந்துவிடும். திருவாசகம் பாடும்போது வேறு சிந்தனைகள் மனத்திற் குறுக்கிடுதல் கூடாது.

எட்டாம் திருமுறை

விரதமிருந்து கோயில் கும்பிடுவோர்கள் ஒருமுகப்பட்டு வாசலில் மும்முறை விழுந்து கும்பிட்டும், மும்முறை வீதியைச் சுற்றிவந்தும், இறைவனின் பூசையில் ஈடுபட்டு மெய்மறந்து, கோயிற்குருக்களிடம் விபூதி, தீர்த்தம் வாங்கி வெளியே செல்லும் வரைக்கும் எவ்வாறு வணங்குகிறார்களோ அவ்வாறு பன்னிரு திருமுறைகள் ஓதும் அடியார்களும் வேறு தியானமின்றி ஓதவேண்டும் எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தை அதிமதிப்புக் கொடுத்து கோயில்கள் தோறும்முழுமையாக ஒரே நாளில் ஓதுகிறார்கள். ஒவ்வோரூரிலுமுள்ள சைவப் பெருமக்கள் வருடாவருடம் இம்முற்றோதலைச் செய்து வருவது பெரும் புண்ணியமாகும்.

திருவெம்பாவை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலந் தொடங்கி சிவ புராணம் எல்லா இடங்களிலும் பாராயணம் பண்ணப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் மார்கழித்திங்களில் ஆதிரை நாளீறாகிய பத்து நாட்களும் திருவெம்பாவைப் பூசைகளும் நடைபசனைகளும் இயற்றப்படுகின்றன. இப்பத்து நாட்களிலும் திருவாதவூரடிகள் புராணம் வாசித்து உரையுஞ் சொல்லப்படுகிறது. நாவலர் பெருமானின்பின், சமயாசாரியர் குருபூசை ஆதியனவற்றை யாழ் சைவ பரிபாலன சபை, கடைப்பிடித்து வருகிறது. சைவப்பள்ளிக்கூடங்களிலும் சமய நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அளவெட்டி சைவ வாலிப சங்கம் நான்கு குரவர்குருபூசைகளையும், நியமமாக நான்கு திருக்கோயில்களில் நடைபெற 1917லிருந்தே வழிவகுத்துள்ளது.

ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு

திருவாசகத்தின் பெருமையை அறிந்த மேலைத் தேயத்தறிஞராகிய டாக்டர் போப் என்பவர்தமதுமனதை அதிற்பறிகொடுத்ததனால், அதைஆங்கிலத்திற்பெயர்த்து எழுதி உலகப் பெரியோரறியும் படி செய்தார்.

அவ்வாறான, திருவாசகத்தைப் பாடி மணிவாசகப் பெருமானை, சிவனென்றே நினைத்து பூசித்து விழாவெடுத்து மாகேசுர பூசை செய்து, பிறவிப் பயனின் பேற்றை அடைந்து உய்வோமாக.

# போதைப் பொருள் கடத்தலை தடுக்க இன்ரபோலின் உதவி

(கொழும்பு)

நாட்டிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் போதைவஸ்து கடத்தல் மற்றும் பாவனை என்பவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த 'சர்வதேச பொலிஸார்' தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கு புதிய நடவடிக்கையொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

விரைவில் அமுல்படுத்தவுள்ள இப்புதிய நடவடிக்கையில் பொலிஸாரும், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தினரும், முப்படையினரும் இணைந்து செயற்படவுள்ளனர்.

சில அரசியல் வாதிகளின் தலையீடுகள்காரணமாகசட்டவிரோதநடவடிக்கையைதடுப்பதில் பொலிஸார் பலநெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய தலையீடுகளின்றிபொலிஸார் இனிமேல் செயற்பட உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# வற் வரிமூலம் 2 300 மில்லியனை வருமானமாக பெறலாம்

(கொழும்பு)

வற் வரியின் மூலம் இவ்வாண்டு 2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி யிலிருந்து இவ்வரி அமுலுக்கு வரவுள்ளது.

ஓய்வூதியக்காரர்கள், அனுமதிபெற்றதரகர்கள், பங்குபரிமாற்றக்காரர்கள் ஆகியோர் இந்த வரியிலிருந்து விலக்குப் பெற்றுள்ளனர்.

என சொக்ஸி மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

## தினசரி தியானம்

### பேரறிவு

அறிவோடு அறியாமை அற்று அறிவினூடே
குறியில் அறிவு வந்து கூடுநாள் எந்நாளோ?

-தாயுமானவர்

அண்ணலே, உன்னை நான் அறியும்பொழுது அனைத்தையும் அறிந்தவன் ஆகிறேன்.

பெரிய பொருளை அறிந்தவனுக்கு ஆவலில்லை, அச்சமில்லை, ஏமாற்றமில்லை, பதைபதைப்பில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவன் அமைதியே வடிவெடுத்தவன் ஆகிறான். எதுவும் அவனைத் துன்புறுத்தாது. மனிதன் மடியும்போது உடைவது ஓடு; எஞ்சியுள்ள பேரறிவுப்பொருளே அம்மனிதனது நிஜ சொரூபம். பேரறிஞனை யாரும் துன்புறுத்த முடியாது. ஏனென்றால் நிறைபொருளோடு அவன் ஒன்றித்து விட்டான்.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# மானிப்பாய் பிரதேசசபை நுளம்புப் பெருக்கத்தை தடுக்க நடவடிக்கை

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக் குட்பட்ட பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மானிப்பாய் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதன் மூலம் டெங்குக் காய்ச்சலை கட்டுப்பாட்டுக்குள் கெண்டுவரும் இந்நடவடிக்கையின் கீழ், சிரமதான நிகழ்வுகள் மற்றும் கருத்தரங்குகளை மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் பகுதிகளில் மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் கணேஸ்வரராஜாவுடன் இணைந்து பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் ஏற்பாடுசெய்துள்ளனர்.

இப்பணியில் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையினரின் உதவியும் பெறப்பட்டு பலதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக மானிப்பாய் பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர்செ.ரமேஸ் தெரிவித்தார். (ஷ-252)

# மனிதனின் துன்பத்தை உணரும்போதே

# உயர்ந்த சமூகப் படைப்புகள் உருவாகிறது

## கலாநிதி என். சண்முகலிங்கன் உரை

"ஆக்க இலக்கியம் படைக்கின்ற ஒருவன் மானுட நேசிப்பு உடையவனாதல் அவசியம். வெறுமனே இரங்குதல் என்பதற்கு அப்பால், துயருறும் மனிதனுள் நுழைந்து அவன் வலியுணர்ந்து, அவன் கதைபேசும் நிலையிலேயே உயர்ந்த சமூகப் படைபபுகள் உருப்பெறுகின்றன. மானுடத்தை வாழ்விப்பதே இலக்கியங்களின் நோக்கமாக இருத்தல் வேண்டும்"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக அரசறிவியல்-சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி. என். சண்முகலிங்கன் அண்மையில் யாழ் பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில், யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடந்த வதிரி இ. இராஜேஸ்கண்ணனின் "முதுசொமாக" சிறுகதைத் தொகுதி அறிமுக அரங்கில் உரையாற்றும் போது கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

"நல்ல இலக்கியம் படைக்கின்ற ஒருவன் நல்ல மனிதனாக இருத்தல் வேண்டும். மற்றவர்களின் உணர்வுகளை தன்னுணர்வாக கொண்டு பிறருக்காக இரங்குதல் வேண்டும். இந்த வகையில் இராஜேஸ்கண்ணனது படைப்புகள் யாவும் அவரின் மானுட நேயத்தை வெளிக்கொணர்பவையாக அமைகின்றன.

'எமக்குத் தொழில் கவிதை' என்று பாரதி சொல்வதைப் போல ஒரு ஆக்க இலக்கிய கர்த்தாவுக்கு இலக்கியம் படைத்தல் வாழ்வாகிவிட வேண்டும். வாழ்க்கை வேறு இலக்கியம் வேறு ஆகிவிட முடியாது. நல்ல மனிதனாக இருக்கும் ஒரு இலக்கிய கர்த்தாவின் இலக்கியம் வாழ்க்கையாகி விடுககின்றது: மானுடத்தை வளர்க்கின்றது. இலக்கிய விமர்சகர்கள் பல்வேறு கோட்பாடுகளின் வழி நின்று இலகியத்தின் வெற்றி தோல்விகளை மதிப்பிட்டாலும் இலக்கிய கர்த்தாவின் வெற்றி என்பது மனித நேயத்தின் உச்சத்தை காண்பதாக இருக்க வேண்டும். என்றும் தெரிவித்தார்.

(ந)




வதிரி ராஜேஸ்கண்ணனின் முதுசொமாக சிறுகதைத் தொகுதி அறிமுக விழா அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது கலாநிதி என். சண்முகலிங்கன் உரையாற்றுவதையும், கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணஐயர், பேராசிரியர் நா. ஞானகுமரன், நூலாசிரியர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## தட்டிவான் - லொறி மோதியதில் நால்வர் படுகாயம்

### அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிப் புறப்பட்டுச் சென்ற தட்டிவான் ஒன்றுடன் கொழும்பிலிருந்து வந்த லொறி ஒன்றும் மோதியதில் தட்டிவான் சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்த் நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30. மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து 14 பயணிகளுடன் கொடிகாமம் புறப்பட்டுச் சென்ற தட்டிவானும் கொழும்பில் இருந்து வந்த லொறியும் அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

தட்டிவானில் பயணம் செய்த 14 பயணிகளில் மூவரைத் தவிர ஏனையோர் சிறுகாயங்களிற்கு இலககாகி யாழ் போதனாவைத்திசாலையில் சிகிச்சை பெற்றபின் வீடு திரும்பியுள்ளனர்.

எஸ்.பத்மநாதன்(சாரதி வயது 28), எஸ்.திருநாவு - வயது28(படுகாயமடைந்த இவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளது) சு.கணேசன் (வயது 35), த.கந்தையா (வயது 65) ஆகியோரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (வ-6)

## பதவி வெற்றிடம்

⇨ அலுவலகச் செய்தியாளர்கள் (வெளியகம்)
(ஆண்கள் மட்டும்)

⇨ அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம்)
(ஆண், பெண் இருபாலாரும்)

**கல்வித் தகைமை:-**

க.பொ.த (சா)தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் திறமைச் சித்தி

அத்துடன் க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி

**வயது:-**

25க்கும் 50க்கும் இடைப்பட்ட வயதெல்லை

**நிரந்தர வதிவிடம்:-**

பத்திரிகைத் காரியாலயம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து ஆகக்கூடியது 7மைல் தூரத்திற்கு உட்பட்டதாக விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடம் இருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, முழுப்பெயர், பால், பிறந்ததிகதி, நிரந்தர விலாசம், தற்காலிக விலாசம் , தே.அ.அட்டை இலக்கம், கி.சே.பிரிவு, உ.அ பிரிவு, விவாகநிலை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்கள் அடங்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணபத்தை:-

**நிர்வாக உத்தியோகத்தர்**
**வலம்புரி - சங்குநாதம்**
**இல. 15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**எனும் முகவரிக்கு எதிர்வரும் 20ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்**

மு.குறிப்பு:-
சனி,ஞாயிறு தினங்களில் கடமையாற்ற முடியாதவர்களின் விண்ணணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

## ம.தி.மு.க தடை செய்யப்படும்!

### தமிழக முதல்வர் அறிவிப்பு

(சென்னை)

இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பை ம.தி.மு.க. ஆதரிப்பது அபாயகரமானது. நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கும் நல்லதல்ல எனவே ம.தி.மு.காவை தடைசெய்யலாம். இது தொடர்பான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு முதலமைச்சர் செல்வி ஜெயலிதா பத்திரிகையாளர் மத்தியில் நேற்று தெரிவித்துள்ளார்.

**ஈழத்தமிழர்களுக்காக...**

என்னைக் கைது செய்வதன் மூலம் ஜனநாயக விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வரும் அவரது ஆட்சிக்கு எதிராக எனது தொண்டர்கள் சாத்வீகமான முறையில் தமிழ் நாட்டில் சட்ட ஒழுங்கை மதிக்கும் வகையில் போராட்டங்களை நடத்துவர்.

இதேவேளை சாதாரண பொது மகனை தடுத்து வைக்கும் சிறையிலேயே தன்னையும் தடுத்து வைக்குமாறும் தனக்கெனத் தனியான விஷேட சிறையறை தேவையில்லை என்றும் வைகோ கூறினார்.

இதேவேளை வைகோவின் கைதைக் கண்டித்து தமிழ் நாட்டின் முக்கிய இடங்களில் மறியல் போராட்டங்களை ம.தி.மு.க தொண்டர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இப்போராட்டத்தின் போது வன்முறைகளோ தீய சம்பவங்களோ எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**படையினருக்கு...**

செய்திருப்பதாக கடந்த ஆண்டு யூலையில் இலங்கை வந்த அமெரிக்க பசிபிக் கட்டளை பீடத்தின் தளபதி தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையிலேயே அமெரிக்கத் துருப்புக்குழு கொழும்பு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு சமாதான முயற்சிகள் தொடரும் இவ்வேளையில் அமெரிக்கப் படைகள் இலங்கைப் படையணிக்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசின் மறைமுக போர் ஆயத்தத்தின் அறிகுறி என்று அரசியல் ஆய்வாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் அமெரிக்க அரசின் தீவிரமான ஊடுருவல் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

(இ)

**வெகுஜனப் போராட்டம்...**

புலிகளுடன் கலந்து பேசியதினால் பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அரசும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து மக்கள் போராட்டங்களோ, ஹர்த்தால்களோ நடத்துவதற்கு இனிமேல் அரசு ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டாது.

இந்த அனுமதி மறுப்புக் குறித்து நோர்வேயின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மாரப்பன தெரிவித்துள்ளார்.

**அரசின் விசாரணைக்கு...**

மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொ.ஜ.ஐக்கியமுன்னணியின் பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நேற்று நடத்தியிருந்தார்.

அம்மாநாட்டில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இறக்குமதி செய்த குண்டு துளைக்காத வாகனங்கள் தொடர்பாக சரியாக ஆராயாமலும் கணக்காளர் நாயகத்துடன் கலந்தாலோசிக்காமலும் இந்த விடயத்தில் சம்பந்தப்படாத ஒருவர் அறிக்கை விட்டிருப்பது அர்த்தமற்ற செயலாகும்.

இது தொடர்பாக அரசு மேற்கொள்ளவுள்ள எந்தவிசாரணைகளையும் பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (வ)

**நெஸ்பிறேயின்...**

1கிலோ நெஸ்பிறே பால்மா 305 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது 15ரூபா விலை குறைப்பின் மூலம் 290 ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்படுகிறது. (வ)

## மனித உரிமை அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இட்மபெறும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கென விசேட அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பி.சந்திரசேகர என்பவரே இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரியாவார்.

இவர் கடந்த 9ம் திகதி நியமனம் பெற்றுள்ளார். (இ-19-6)

**இந்திய...**

தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹாவுடன் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம் பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அரசு - புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதி இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கிக் கூறியுள்ளதுடன் இரு நாடுகளினதும் உறவுகள் குறித்தும் விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் டிரோன் பெர்னான்டோ பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த)

## எழுதுவினைஞர் பதவி
## 2800 வெற்றிடங்கள் 4 லட்சம் விண்ணப்பங்கள்

(கொழும்பு)

நாடு தழுவிய ரீதியில் வெற்றிடமாகவுள்ள 2800 எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது சுமார் 4 லட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாக பொது நிர்வாக அமைச்சின் ஊடகச் செயலாளர் நிமால் டி.கமகே தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு உட்பட எழுதுவினைஞர்களுகான போட்டிப் பரீட்சையை பரீட்சைத் திணைக்களம் நடத்தவுள்ளதாகவும் எழுதுவினைஞர் தெரிவில் வடக்குக் கிழக்கு விசேடமாகக் கவனிக்கப்படவுள்ளதாகவும் வடக்கில் மட்டும் 137 எழுதுவினைஞர்களுகான வெற்றிடங்கள் இருப்பதாகவும் ஊடகச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## இராணுவத்தின் பலவீனங்களை

## அறிய மூவர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் இராணுவ அமைப்பிலுள்ள பலவீனங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென மூவர் கொண்ட குழுவொன்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவினால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ தலைமை வகிப்பார். திறைசேரி செயலாளர் சாரித்த ரத்வத்தை முன்னாள் இராணுவத் தளபதி டென்சில் பெரேரா ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர்.

இது பற்றி ஒஸ்ரின் பெர்னான்டோ தெரிவிக்கையில் ஓகஸ்ட் மாத முடிவில் தாம் அறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதாகவும், இது போன்று கடற்படைக்கும், விமானப்படைக்கும் குழு அமைக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, கேந்திரப் பதவிகளில் அதிகாரிகளை நியமிக்கும் முறை என்பவற்றிற்கான நடைமுறைவிதிகள் பற்றி கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## இளம் பூசகரை இளைஞர் குழு

## கட்டி வைத்துத் தாக்கியது

### யாழ் நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சகோதரியைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த சகோதரரான இளம் பூசகர் நகரின் இளைஞர் குழுவொன்றினால் கட்டி வைத்துக் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு உள்ளான மிருசுவிலைச் சேர்ந்த இளம் பூசகர் நா. முகுந்தன் (வயது 26) சிசிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

யாழ் போதனா வைத்தியசாலையில் விஷம் தீண்டி அனுமதிக்கப் பட்டிருக்கும் சகோதரியான அனுராதா (வயது 19) என்பவரைப் பார்வையிடுவதற்காக வந்த பிரஸ்தாப சகோதரர் அவரைப் பார்த்துவிட்டு நகரில் உள்ள தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் தொலைபேசி அழைப்பிற்குச் சென்று திரும்பிய வேளையே இளைஞர் குழுவொன்று அவரை அழைத்துச் சென்று கட்டி வைத்துத் தாக்கியதாகத் தெரியவருகின்றது.(இ-6)

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான
நல்லெண்ணெய்
V.S.P.லஞ்ஒயில்
தயாரிப்பாளர்:
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[C/4243]

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.